# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.44/2020

பி.வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 13–03–2026.

பெயர் = சின்னகுருசாமி

பி.வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் கு.வி.–

(1) சர்வே எண்.331/1 ற்கு தாவா என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு வடக்கே பரமசிவம் இடம் உள்ளது என்றால் சரிதான். பரமசிவம் இடத்திற்கு வடக்கே என் இடம் உள்ளது என்றால் சரிதான். பரமசிவம் இடத்திற்கு மேற்கே எனக்கு பாத்தியப்பட்ட 326/1 இடம் உள்ளது என்றால் சரிதான். வாதியின் இடத்திற்கு மேற்கே 326/2 இடம் உள்ளது என்றால் சரிதான். அதற்கும் மேற்கே 332/2A, 332/2B இடம் உள்ளது என்றால் சரிதான். அங்கு 7 ஏக்கர் இடம் உள்ளது. அதன் சர்வே எண்கள் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு 5 ஏக்கர் பாண்டியராஜிற்கு 2 ஏக்கர் என சாட்சி கூறுகிறார். எங்களுடைய நிலங்களில் மக்காச்சோளம் விவசாயம் செய்கிறோம். வாதியும் மக்காச்சோளம் பயிரிடுகிறார் என்றால் சரிதான். தக்காளிரெட்டியார் இடம் சர்வே எண்.332/1A என்றால் சரிதான். தக்காளிரெட்டியார் இடத்திற்கும் பரமசிவம் செட்டியாரின் சர்வே எண்.332/1B இடத்திற்கும் இடையே தென்வடலாக சர்வே வண்டிப்பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த வழியாக சென்றுவருகிறோம் என்றால் சரிதான்.

(2) வாதியின் இடத்தில் வண்டிப்பாதை உரிமை கேட்கிறோம் என்றால் சரிதான். வாதி நிலத்திற்குள் வண்டித்தடம் உள்ளதா என்றால் ஆமாம். வண்டித்தடம் என்பது நிலத்தில் கிடையாது என்றால் சரியல்ல. வாதி இடத்திற்கும் கிழக்கே சர்வே பாதை உள்ளது. வாதி இடத்திற்கும், சுப்புராஜ் கவுண்டர் இடத்திற்கும் இடையே பாதை உள்ளது என சாட்சி கூறுகிறார். அந்த வழியாகத்தான் நாங்கள் சென்றுவருகிறோமா என்றால் ஆமாம். வாதியின் இடத்திற்குள் வண்டித்தடம் உள்ளது என்பதற்கு ஆணையர் நியமனம் கேட்டு நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. வண்டித்தடமே இல்லை என்பதால் மேற்படி நடவடிக்கை என்றால் சரியல்ல. வாதியின் நிலத்திற்குள் சர்வே பாதை உள்ளதா என்றால் ஆமாம்.

அந்த சர்வே வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வாதி இடத்திற்குள் சர்வே பாதை கிடையாது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2020ல் வாதி மல்லிசெடி விவசாயம் செய்துவந்தார் என்றால் சரிதான்.

(3) தாவாச்சொத்தின் வழியாக செல்வதற்கு வாதி அனுமதி அளித்தாரா என்றால் இல்லை. நான் தாவாச்சொத்தில் வண்டியை கொண்டுசென்று மல்லிசெடியை அழித்ததில் ரூ.15,000 நஷ்டம் ஏற்பட்டதா என்றால் இல்லை பொய்யாக சொல்லியுள்ளார். தாவாச்சொத்து வழியாக டிராக்டர் வண்டியை கொண்டு சென்றேனா என்றால் ஆமாம். தாவாச்சொத்து வழியாக வழித்தடம் இல்லை என்பதால் டிராக்டர் கொண்டுசெல்ல எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. சின்னகுருசாமிசெட்டியாருக்கு நாச்சரம்மாள் எழுதிக்கொடுத்த பத்திரம் பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் வாதி சொத்தின் வழியாக டிராக்டர் கொண்டுசெல்ல பாதை இருப்பதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 பட்டாவில் பாதை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.3 நான் சொல்கிற பாதைக்கு செலுத்தப்பட்டதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.4 என் தரப்பில் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய அறிவிப்பு அதில் தடம் பதித்தே வண்டி கொண்டு செல்வதாக சொல்லியுள்ளதில் எத்தனை வருடங்களாக கொண்டு செல்கிறோம் என்றால் 32 வருடங்களாக என சாட்சி கூறுகிறார். நாங்கள் எந்த காலத்திலும் தாவாச்சொத்து வழியாக வண்டியை கொண்டு செல்வது கிடையாது என்றால் சரியல்ல.

(4) எங்களுக்கும் வாதிக்கும் ஆகாது என்பதால் பொய்யாக அவ்வாறு சொல்லிவருகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் அனுப்பிய பதில் அறிவிப்பில் சொல்லிய விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் ஆமாம். போலீசார் இருதரப்பினரையும் விசாரித்தார்களா என்றால் வாதி போலீஸ்நிலையத்திற்கு வரவில்லை என்னை மட்டும் விசாரித்தார்கள் என சாட்சி கூறுகிறார். வாதி காவல்நிலையத்திற்கு சென்றபோது நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளுமாறு சொன்னார்கள் என்றால் சரிதான். என்னிடம் நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளுமாறு சொன்னார்கள் என்றால் சரிதான். எங்களுக்கும், வாதிக்கும் 10 வருடங்களாக பகை உள்ளது. என்மீது வாதி 4 வழக்குகள் போட்டுள்ளார். என்மீது வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற ஆத்திரத்தில் பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன்

என்றால் சரியல்ல. வாதியின் சொத்து வழியாக டிராக்டர் கொண்டு செல்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. டிராக்டர் எத்தனை அடி அகலம் இருக்கும் என்றால் 4 அடி என சாட்சி கூறுகிறார். டிராக்டர் 20 அடி அகலம் இருக்கும் நான் 4 அடி என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.13 12:58:54 +0530